முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1489

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.10.2023, வெள்ளிக்கிழமை

1. ஆறுமுகன் என் அவதார ஞானியே
அறமாக வாழுகின்ற தவசியே
மாறுதலை உலகினில் செய்யும் வண்ணம்
மாதவம் புரிகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 10 ம் நாள், 27.10.2023, வெள்ளிக்கிழமை)
அறமாக கலியுக மக்களுக்கு வரம்தந்து உலகினில்
அற்புதத்தை வருங்காலம் நடத்தி உலகம் அமைதி பெற
3. அமைதிபெற சன்மார்க்க நெறிகாட்டும்
அரங்கன் நீயே கலியின் சிறந்த ஞானி
அமைதிகொண்டு உலகோர் ஞானம் பயில
ஆற்றல்பட அன்னதான சேவையாற்றி
4. ஆற்றியே உலகோரெல்லாம் தயவாய்
உண்மைபட ஞானவான்களாய் வாழ
வாழ வழிகாட்டும் கலியுகத்தின் சிறந்த ஞானி
அரங்கன் நீயே அப்பா
5. அப்பனே உன்வழி உலகோர் வந்து
அறமோடு ஞானம் பயில
காப்பாக சுப்பன் என் அருளோடு
கலியுகத்தில் கடைத்தேறி மேன்மை காண்பர்
6. காணவே அரங்கன் திருவடியே
கலியுகத்தில் ஞானவழிகாட்டும் ஒரே வழியாகும்
பெருமைகொண்டு அரங்கன் திருவடி பற்றி
புண்ணியங்கள் செய்து கொண்டு

7. ஞானிகள் பூஜை செய்து இனிதே
புகலுவேன் அரங்கன் புகழ் பரப்ப
பரப்பவே உலகோருக்கு இலகுவாய்
பழுதின்றி ஞானசித்தி உறுதியாகும்

8. உறுதிகொண்டு அரங்கன்வழி வருவோரெல்லாம்
உலகத்தில் ஞானிகள் ஆகி
உலக மாற்றம் செய்தும்
அற்புதம் நிகழ்த்தக் கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–